தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.04.2023 முதல் 11.04.2023)

**அறிக்கைஎண்: 28/2023** **தேதி: 06.04.2023**

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (07.04.2023 முதல் 11.04.2023).

| கடந்தவாரவானிலை (03.04.2023 முதல் 05.04.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (07.04.2023 முதல் 11.04.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 03/04 | நாள்-2 04/04 | நாள்-3 05/04 | தேதி | நாள்-1 07/04 | நாள்-2 08/04 | நாள்-3 09/04 | நாள்-4 10/04 | நாள்-5 11/04 |
| 7.1 | 3.1 | 10.2 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 2 | 0 |
| 34 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 35 | 35 | 34 |
| 27 | 27 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 26 | 25 |
| 5 | 3 | 3 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 3 | 1 | 3 | 1 |
| 63-76 | 77-74 | 77-72 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 80-50 | 80-50 | 80-50 |
| 5 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 4 | 6 | 8 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 10.04.2023 அன்று குறைந்த அளவு தூரல் மழை எதிர்பாபார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும். |
| பயறுவகை பயிர்கள் | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயறுவகை பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசலை தெளிக்கவேண்டும் |
| தென்னை | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்க முடியும் |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் முலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும்.

**இயக்குநர்**